BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் பிராந்திய கவுன்சிலர் ரொவீனா சான்ட்டோஸ் அவர்கள் FCM வாரியத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 4, 2021) – கனடா நாட்டு நகராட்சிகளின் கூட்டமைப்பானது (Federation of Canadian Municipalities (FCM) ), இன்று நடைபெற்ற தனது வருடாந்திர பொதுக்குழுக் கூட்டத்தில், ப்ராம்ப்ட்டன் பிராந்திய கவுன்சிலர் ரொவீனா சான்ட்டோஸ் அவர்கள் இதன் இயக்குனர்கள் சபைக்கு மீண்டும் ஒரு வருட காலத்திற்கு (2021-2022) தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்தது.

1,901 ஆம் ஆண்டு முதலே, கனடாவின் நகராட்சி ஆளுமையின் தேசிய குரலாக FCM இருந்து வருகிறது. நாடு முழுவதும் இருந்து 2,000 க்கும் மேற்பட்ட நகராட்சிகள் உறுப்பினர்களாக உள்ளடங்கியுள்ளனர், இது அனைத்து கனடியர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமானவர்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கிறது. இந்த ஆண்டு மே மாதம் 31 முதல் ஜூன் 4 வரை மெய்நிகர் முறையில் நடைபெற்ற இந்த மாநாடு, முக்கிய பிரச்சினைகள் குறித்து FCM கொள்கையை அமைப்பதற்கும், பின்வருவனவற்றிற்கு மத்திய அரசின் ஆதரவையும் நிதியுதவியை பெறுவதற்கும் ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கு ஒரு வாய்ப்பை வழங்கியது:

- பேருந்து போக்குவரத்து இயக்கங்களுக்கு நிதியளிப்பது உட்பட பாதுகாப்பான மறுதொடக்கத்திற்காக அடுத்துவரும் ஒப்பந்தத்தின் பேரில் பணிபுரிதல்;
- பிராந்தியங்களுக்கு இடையிலான, உயர்-ரக பேருந்து போக்குவரத்து நெட்வொர்க்குக்கான அர்ப்பணிப்பு;
- செயல்பாடுமிக்க பேருந்து போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் திட்டங்களை செயல்படுத்த நிலையான நிதியளிப்பு;
- காலநிலை மாற்றத்தை தழுவிகொள்ளுதல் மற்றும் பின்னடைவை சரிப்படுத்துவதற்கான முதலீடுகள் மற்றும் கொள்கை மாற்றங்கள்; மற்றும்,
- ரோஜர்ஸ் சைபர் செக்யூர் கேட்டலிஸ்ட் Cybersecure Catalyst) போன்றவற்றில் முதலீடு செய்தல் போன்ற பொருளாதார வளர்ச்சி மற்றும் மீட்சிக்கான முதலீடுகள்.

நகரத்தின் அறிவுறுத்தல்கள் பற்றிய கூடுதல் தகவல்கள் ப்ராம்ப்ட்டன் நகர இணையதளத்தில் கிடைக்கின்றன.

FCM இயக்குநர்கள் சபைக்கான தேர்தல்கள் மே 31 முதல் ஜூன் 4 வரை மெய்நிகர் முறையில் நடைபெற்றன, அவை இன்று FCM இன் வருடாந்திர பொதுக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

**அறிஞர் கூற்றுக்கள்**

"எஃப்.சி.எம் (FCM ) இயக்குநர்கள் சபையில் நாடு முழுவதும் உள்ள நகராட்சி தலைவர்கள் கொண்ட குழுவுடன் மற்றொரு பதவிக்காலம் முழுக்க பணியாற்றுவது ஒரு கவுரவம் ஆகும். FCM இல் நாங்கள் எங்கள் கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதில் தீவிரமாக கவனம் செலுத்துகிறோம், எங்கள் பொருளாதார மீட்பு மற்றும் காலநிலை மாற்ற இலக்குகள் உட்பட ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கான முக்கிய முன்னுரிமைகள் குறித்து நான் தொடர்ந்து வாதாடுவேன். நகராட்சிகளுக்கு பிரதிநிதித்துவம் செய்கின்ற நாட்டின் முன்னணி வாதாடும் குழுவாக இருந்தபடி, COVID-19 தொற்றுநோயால் ஏற்ப்ட்ட நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் நகராட்சிகளுக்கு கூட்டாட்சி நிதியைப் பெற்றுத் தருவதில் FCM வெற்றிபெற்றுள்ளது மற்றும் ஒன்ட்டேரியோ நகராட்சிகள் சங்கம் (AMO) மற்றும் ஒன்ட்டேரியோவின் பெரு நகர மேயர்கள் (OBCM) தங்களுக்கான மாகாண நிதிகளைப் பெறுவதிலும் இது வெற்றி பெற்றுள்ளது. ஒன்றாக இருந்தபடி, நமது உள்ளூர் சமூகங்களின் அபாரமான தாக்குப்பிடிக்கும் தன்மையை நாங்கள் கொண்டாடுகிறோம். எங்கள் நகரங்களும் குடியிருப்பாளர்களும் தொற்றுநோய்ப் பரவலின் ஊடாக முன்னேறுவதற்காக, என்னவெல்லாம் தேவை என்பதை நாங்கள் தொடர்ந்து தேடிக்கண்டறிவோம்; இன்னும் சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவோம். "

- *ரொவீனா சான் ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகர சபை சார்பாக, கவுன்சிலர் சான்ட்டோஸ் அவர்கள் எங்கள் நகரத்தின் இந்தப் பதவியில் இருந்தபடி சேவை செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் நான் பெருமிதம் கொள்கிறேன்; பொதுப் பேருந்து போக்குவரத்துக்கான நியாயமான நிதிப்பங்கினைப் பெறுவது, செயல்பாடுமிக்க பேருந்து போக்குவரத்து நெட்வொர்க், கோவிட்-19 தொற்றிலிருந்து மீட்புக்கான ஆதரவு; மற்றும், பிராம்ப்டன் குடியிருப்பாளர்களுக்கு முக்கியமான பிற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது ஆகியவற்றை உறுதி செய்ய இவர் முன்னேறிச் செல்கிறார். ரொவீனாவின் உந்துதலும் அர்ப்பணிப்பும் ஒன்றுசேர்ந்து, ப்ராம்ப்ட்டன் நகரத்திலும் பீல் பிராந்தியத்திலும் வசிப்பவர்களின் குரல் ஓங்கி ஒலித்து கேட்கப்படுவதை உறுதிசெய்யும் மற்றும் இதற்கான பலன்களையும் திறம்பட வழங்கும் என்று நான் நம்புகிறேன். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

BRAMPTON

# Media Release

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca